தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

MCOP. No.61/2023

RW:1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தனவேல் | த /பெ. | | பக்கிரி |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் 13 ஆம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ், M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**13.08.2024**

முதல் விசாரணை

நான் எனது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மையானவை. அந்த சங்கதிகளை நான் தான் எனது வழக்கறிஞருக்கு கூறினேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் TN 32 N 38 என்ற வாகனத்தின் நடத்துநர். மேற்படி விபத்தில் சம்பவ இடத்திலேய 6 பேர் உடல் நசுங்கி இறந்து விட்டனர். கிட்டதட்ட 9 பேருக்கு கொடுங்காயமும் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடக்கும்போது

பேருந்தின் முதல் இருக்கையில் நான் இல்லை. நான் டிக்கெட் கொடுத்துகொண்டு பேருந்தின் கடைசியில் இருந்தேன். மேற்படி பேருந்தை முரளி என்பவர் ஓட்டினார். நான் பின்பக்கம் இருந்ததால் எனக்கு நேரடியாக சம்பவம் நடந்தது தெரியாது என்றால் சரியல்ல. இந்த விபத்து நடக்கும்போது காலை 08.00 மணி. அது தேசிய நெடுங்சாலை ஒரு நிமிடத்திற்கு குறைந்தது 50 வண்டிகள் செல்லும். அந்த பேருந்தை ஓட்டிய டிரைவர் தான் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. அந்த டிரைவர் எங்கு இருக்கிறார் என்றால் எங்கள் டிப்போவில் வேலை பார்க்கவில்லை. இந்த விபத்தை பற்றி எனக்கு ஏதும் தெரியாது என்றும் நான் அனுமானமாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் இரும்பு லோடு ஏற்றி கொண்டு சென்று கொண்டிருந்த லாரி மீது அரசு பேருந்தை ஓட்டி அந்த டிரைவர் அதிகவேமகாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு பேருந்து ஓட்டுநர் தான் காரணம் நஷ்ட ஈடு

போக்குவரத்து துறை தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம் /- V. சுந்தரராஜ், M.L.,
தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்